# Tamil Murli Quiz 27-11-2015

தமிழ் முரளி வினாடி-வினா
முரளியினை மறுமுறை நினைவுற உதவும் வினாடி-வினா. இன்றைய முரளியிலிருந்தே கேள்விகள் கேட்கப்படும்.
இங்கே கிளிக் செய்க: 20 நிமிட முரளியின் எம்பி3 கோப்புகள் மற்றும் பழைய வினாடி-வினா.abc

**Q.1)** <u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை முடிக்கவும்:</u>
**குழந்தைகளாகிய நீங்கள் உண்மையான தங்கமாக ஆவதற்காக எந்த தூக்கில் தொங்கிக்கொண்டே இருக்க வேண்டும் என்று பாபா கூறுகிறார்?**

- **A.** ○ தூய்மை என்ற தூக்கு
- **B.** ◉ நினைவு என்ற தூக்கு
- **C.** ○ ஸ்ரீமத் என்ற தூக்கு
- **D.** ○ ஞானம் என்ற தூக்கு

**Q.2)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**எந்த பலம் குற்றப்பார்வையை உடனே மாற்றிவிடும்?**

- **A.** ◉ ஞானம் என்ற மூன்றாவது கண்ணின் பலம்
- **B.** ○ எனக்கு சுயம் பகவான் தந்தையாகி கற்பிக்கிறார் என்ற நினைவின் பலம்
- **C.** ○ சதா தந்தையின் நினைவில் இருக்கும் பலம்
- **D.** ○ சுகம் கொடுக்கும் வள்ளல் எனக்கு சுகத்தைக் கொடுப்பதற்காக வந்து படிப்பிக்கிறார் என்ற நினைவின் பலம்

**Q.3)** <u>சரியா? தவறா?:</u>
**இப்பொழுது உங்களுக்கு ஞானக் கடலிடமிருந்து ஞானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. உங்களது புத்தியில் லட்சியம் இருக்கிறது. மற்ற எந்த சத்சங்கங்களிலும் எந்த லட்சியமும் கிடையாது .**

- **A.** ◉ சரி
- **B.** ○ தவறு

**Q.4)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**ஆன்மீகத் தந்தையும் ஆத்மா தான். ஆனால் அவர் _______________________ . அவரிடம் எந்தக் கறையும் ஏற்படுவது கிடையாது.**

- **A.** ○ சதா தூய்மையானவர்
- **B.** ○ பிறப்பு-இறப்பில் வராதவர்
- **C.** ○ விகாரமற்றவர்
- **D.** ◉ முழு நிறைவானவர்

**Q.5)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**சாஸ்திரங்களில் எந்த விஷயம் கிடையாது என்று பாபா கூறுகிறார்?**

- **A.** ◉ முதல் நம்பரில் இருந்த ஸ்ரீ கிருஷ்ணரின் ஆத்மா பிறகு கடைசி நம்பரில் வந்து விட்டது. நான் இவரிடத்தில் பிரவேசம் செய்து இராஜயோகம் கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கிறேன்.
- **B.** ○ ஆத்மா என்பது என்ன? பரமாத்மா என்பது யார்?
- **C.** ○ சுய தரிசன சக்கரத்தின் உண்மையான பொருள் என்ன?
- **D.** ○ இந்த உலகத்தின் ஆயுள் எத்தனை ஆண்டுகள்?

**Q.6)** <u>சரியா? தவறா? :</u>
**நான் தந்தையின் நினைவில் தான் இருக்கிறேன் என்று பலர் பொய் கூறுகின்றனர். இருக்க முடியாது என்பது பாபாவிற்குத் தெரியும்.**

- **A.** ◉ சரி
- **B.** ○ தவறு

**Q.7)** <u>சரியான விடையை தேர்வு செய்யவும்:</u>
**விநாசகால விபரீத புத்தி என்று பாடப்பட்டுள்ளது. இதுபோன்ற விஷயங்களை சிந்தனை செய்வதற்கு ஏகாந்தம் தேவை . இங்கு மிக நல்ல ஏகாந்தம் இருக்கிறது. அதனால் தான் ___________________________ மகிமை இருக்கிறது.**

- **A.** ○ இந்த ஞானத்திற்கு
- **B.** ○ இந்த இராஜயோகத்திற்கு
- **C.** ◉ மதுவனத்திற்கு
- **D.** ○ பாபாவிற்கு

**Q.8)** <u>சரியான விடை கொண்டு வாக்கியத்தை பூர்த்தி செய்யவும்:</u>
**அனைவரும் கிருஷ்ணர் மீது தான் அன்பு செலுத்துகின்றனர். கிருஷ்ணர் தான் ஊஞ்சலில் ஆட்டப்படுகிறார். இராதைக்கு ஏன் இவ்வாறு செய்வதில்லை?**

A. ○ இராதை பெண்ணாக இருக்கிறார். ஆண்கள் தான் தந்தையின் வம்சாவளி கள் ஆகின்றனர். அதனால்
B. ○ கிருஷ்ணர் தான் நம்பர் ஒன் தூய்மையானவர். இராதை அவருக்கு பிறகு தான்
C. ○ சாஸ்திரங்களில் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதை மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டனர்.
D. ◉ நாடகப்படி கிருஷ்ணரின் பெயர் தான் பயன் படுத்தப்பட்டு வருகிறது

**Q.9)** **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**பக்த மாலை யாருக்கு உருவாக்கப்படுகிறது என்று பாபா கூறுகிறார்?**

A. ◉ தீவிர பக்தியில் கழுத்தை அறுத்துக்கொண்டு உயிர் தியாகம் செய்ய துணிந்தவர்களுக்கு
B. ○ எல்லையற்ற தந்தையின் மேல் அளவு கடந்த அன்பு வைப்பவர்களுக்கு
C. ○ சாஸ்திரம் முதலிய வற்றை படித்து அதன் படி தீவிர பக்தி செய்பவர்களுக்கு
D. ○ மகாபாரதம், ராமாயணம் போன்ற சாஸ்திரங்களை பாவனையுடன் படிப்பவர்களுக்கு

**Q.10)** **சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :**
**தந்தையைப் பின்பற்றுதல் என்ற பாடத்தின் மூலம் கடினமானதையும் எளிதாக ஆக்கக்கூடிய _________________ ஆகுக.**

A. ○ விஷேச ஆத்மா
B. ○ புத்திசாலி ஆத்மா
C. ○ யுக்தி யுக்த ஆத்மா
D. ◉ தீவிர முயற்சியாளர்